# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (01.10.2022 முதல் 05.10.2022 )

**அறிக்கை எண் 078/2022** **தேதி.30.09.2022**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 27.9.22 முதல் 29.09.22 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 79 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம 64 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-17 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (27.09.2022 முதல் 29.09.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.10.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 27/09 | 28/09 | 29/09 | தேதி | நாள்-1 01/10 | நாள்-2 02/10 | நாள்-3 03/10 | நாள்-4 04/10 | நாள்-5 05/10 |
| 0.1 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 8 | 34 | 22 | 10 | 8 |
| 31 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 31 | 30 | 31 | 31 |
| 23 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 21 | 22 | 22 |
| 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 6 | 8 |
| 79 | 79 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 80 | 80 |
| 66 | 66 | 64 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 50 | 50 | 50 | 50 |
| 12 | 17 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 6 | 6 |
| 200 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 290 | 290 | 280 | 290 | 280 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (01.102022 முதல் 05.10.2022)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம்

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **9-12** கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பெட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 01-10-2022 | 5 | 3 | 3 | 5 | 4 | 3 | 2 | 5 | 5 | 5 | 3 | 5 | 3 |
| 02-10-2022 | 30 | 22 | 24 | 23 | 25 | 22 | 17 | 30 | 29 | 31 | 23 | 29 | 16 |
| 03-10-2022 | 18 | 13 | 13 | 14 | 14 | 14 | 11 | 17 | 17 | 19 | 14 | 18 | 11 |
| 04-10-2022 | 7 | 5 | 6 | 6 | 6 | 6 | 5 | 7 | 7 | 7 | 6 | 7 | 5 |
| 05-10-2022 | 6 | 6 | 8 | 5 | 6 | 10 | 5 | 6 | 6 | 6 | 10 | 6 | 4 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழையுடன் காற்றின் வேகம் **6 - 8** கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு மண் ஈரத்தினைப்பொறுத்து நீர்பாசனம் செய்ய வேண்டும்.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் பருத்தி, மஞ்சள், மக்காச்சோளம், தக்காளி, நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு தக்க வடிகால் வசதி ஏற்படுத்தவும்.<br>மானாவாரி விதைப்பில் **20** அடி இடைவெளியில் சரிவுக்கு குறுக்காக குறு வரப்புஅமைத்து அல்லது குறுக்கு உழவு செய்து வடிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைக்கவும். |
| சோளம் | விதைப்பு | மழையினைப் பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை காலத்தில் பயிர் செய்யவுள்ள பயிர்களான சோளம், கம்பு, மக்காச்சோளம் மற்றும் நரிப்பயிர் விதைக்கலாம். |
| பருத்தி | விதைப்பு | நிலவும் அதிக மண் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக பருத்தி செடிகளில் அதிகமான தழை வளர்ச்சியை தடுத்து பூக்களை அதிகப்படுத்த **15** வது இடைக்கணுவுக்கு மேல்உ ள்ள பகுதியை கிள்ளி விடவும். மேலும் பூ உதிர்வதை தவிர்க்க நாப்தலின் அசிடிக் |

| | | |
|---|---|---|
| | | அமிலம் 40 மிலி கிராமை 1 லி தண்ணீரில் கரைத்து நடவு செய்த 60 முதல் 90 வது நாளில் தெளிக்கவும் |

| | | |
|---|---|---|
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி மீ வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழைக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |
| கால்நடைகள் | | கால்நடைகளில் பால் கறந்த பிறகு மடியை பொட்டாசியம் பர்மாங்கனேட் கொண்டு நன்றாக கழுவி விடுவதன் மூலம் மடிவீக்க நோய் வராமல் கட்டுப்படுத்தலாம். நனைந்த தீவனத்தை உபயோகப்படுத்துவதை தடுப்பது நல்லது.<br><br>மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும். |

**குறுஞ்செய்தி**

- மழையினைப் பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை காலத்தில் பயிர் செய்யவுள்ள பயிர்களான சோளம், கம்பு, மக்காச்சோளம் மற்றும் நரிப்பயிர் விதைக்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**